# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2019–2020

**மானியக் கோரிக்கை எண். 9**

**சீ. வளர்மதி**
பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2019

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | இடஒதுக்கீடு | 4 |
| 3. | கல்வி | 6 |
| 4. | கல்வி உதவித்தொகைத் திட்டங்கள் | 7 |
| 5. | இலவசக் கல்வி | 15 |
| 6. | மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த கிராமப்புற பள்ளி மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல் | 20 |
| 7. | விடுதிகள் | 21 |
| 8. | அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம் | 29 |
| 9. | சிறந்த காப்பாளர்கள் / காப்பாளினிகளுக்கு மாநில அளவிலான விருதுகள் வழங்குதல் | 31 |
| 10. | விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 31 |
| 11. | விடுதி கட்டடங்கள் பராமரிப்பு | 32 |
| 12. | கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் | 33 |
| 13. | சீருடைகள் | 37 |

| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 14. | மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் | 38 |
| 15. | பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | 40 |
| 16. | சீர்மரபினர் நல வாரியம் | 43 |
| 17. | தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் | 46 |
| 18. | சமூக நீதிக்கான பெரியார் விருது | 50 |
| 19. | தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் நிருவாகக் குழுமம் | 51 |
| 20. | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் | 53 |
| 21. | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | 58 |
| 22. | சிறுபான்மையினர் நலன் | 60 |
| 23. | தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 77 |
| 24. | தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் | 78 |
| 25. | தமிழ்நாடு வக்ஃப் வாரியம் | 83 |
| 26. | தமிழ்நாடு மாநில ஹஜ் குழு | 87 |
| 27. | இணைப்பு | 93 |

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 9

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2019–2020

### முன்னுரை

மனித வளமே மாநிலத்தின் மிகச் சிறந்த மூலதனமாகும். சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின சமூகத்தினர் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் மேம்பாடு அடைவதற்கு இணக்கமானதொரு சூழலை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு நலத் திட்டங்களை வகுத்து செயல்படுத்த இவ்வரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. இம்மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காக கல்வி உதவித்தொகை வழங்குதல், ஊக்கத்தொகை வழங்குதல், மிதிவண்டி வழங்குதல் மற்றும் விடுதி வசதி ஏற்படுத்தித் தருதல் ஆகிய திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. பிரமலைக் கள்ளர் இனத்தவரின் கல்வி மேம்பாட்டிற்காக கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்

நடத்தப்பட்டு வருகின்றன. இம்மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் மூலம் சுயத்தொழில் தொடங்க கடனுதவி வழங்குதல் மேலும், தையல் இயந்திரங்கள், சலவைப்பெட்டிகள், வீட்டுமனைகள் வழங்குதல் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்துறையின் கீழ் செயல்படும் சீர்மரபினர் நல வாரியம், தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் மற்றும் உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியம் ஆகிய வாரியங்கள் மூலம் இவ்வாரியங்களில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. வக்ஃப்புகளை சரியான முறையில் நிர்வாகிப்பதற்காகவும், வக்ஃப் சொத்துக்களை பராமரிப்பதற்காகவும் மற்றும் பாதுகாப்பதற்காகவும் தமிழ்நாடு வக்ஃப் வாரியம் செயல்பட்டு வருகிறது. மாநிலத்திலுள்ள வன்னிய குல சத்திரியர் சமுதாயத்தினைச் சேர்ந்த நபர்களால் அல்லது நிறுவனங்களால் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்படும் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகளையும் நிலைக்கொடைகளையும் பாதுகாப்பதற்கும், பேணி

வருவதற்கும் என தமிழ்நாடு வன்னிய குல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணி வருதல்) சட்டம் 2018 (தமிழ்நாடு சட்டம் 44/2018) இயற்றப்பட்டது. இச்சட்டம் 4.2.2019 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இச்சட்டத்தின் கீழ் தமிழ்நாடு வன்னிய குல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் நிருவாகக் குழுமம் அமைக்கப்பட்டுள்ளது. அரசு ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கு நிதி உதவி வழங்கி வருகிறது. ஹஜ் புனித பயணத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஹஜ் புனித பயணிகளுக்கு நிதி உதவி வழங்குதல் மற்றும் உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல் ஆகிய திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. ஐக்கிய நாடுகளின் பொது அவையால் 2015 ஆம் ஆண்டில் தெரிவிக்கப்பட்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்குகளை (Sustainable Development Goals) அடையும் வகையில் இத்துறையின் செயல்பாடுகள் நெறிப்படுத்தப்படும்.

## 2. இடஒதுக்கீடு

கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் மக்கட்தொகைக்கேற்ப தங்களுக்குரிய பங்கினைப் பெறமுடியாமல் நீண்ட காலமாக இருந்து வந்த சமுதாயத்தினரது வாழ்வில் முன்னேற்றம் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் **1921** ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட இம்மாநிலத்தின் இடஒதுக்கீட்டுக் கொள்கை பல மாறுதல்கள் அடைந்து தற்போது **69** விழுக்காடு என்ற அளவினை எட்டியுள்ளது.

| **வ. எண்.** | **பிரிவு** | **இடஒதுக்கீடு விழுக்காடு** |
|---|---|---|
| 1. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | **26.5** |
| 2. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள் | **3.5** |
| 3. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு / சீர்மரபினர் | **20** |
| 4. | ஆதிதிராவிடர் | **18** |
| 5. | பழங்குடியினர் | **1** |
| **மொத்தம்** | | **69** |

மண்டல் குழு வழக்குகள் என்று அறியப்பட்ட இந்திராசஹானி எதிர் மைய அரசு வழக்கில் மொத்த இடஒதுக்கீட்டினை **50** விழுக்காட்டிற்குக் கட்டுப்படுத்தி மாண்பமை உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின் காரணமாக கல்வி நிலையங்களில் சேர்க்கை மற்றும் அரசுப் பணிகளுக்கான நியமனங்கள் ஆகியவற்றில் **69** விழுக்காடு இடஒதுக்கீட்டினை செயல்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்ட நிலையில், தமிழ்நாடு அரசு விரைந்து செயல்பட்டு **1993** ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு **(**கல்வி நிலையங்களில் இடங்களையும், மாநில அரசின் கீழ் வருகின்ற பணிகளில் நியமனங்கள் அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்**)** சட்டத்தினை **(**தமிழ்நாடு சட்டம் **45/1994)** நிறைவேற்றியது**.** பின்னர் அரசமைப்புச் சட்டத்தின் கூறு **31–B–**இன் கீழ் பாதுகாப்புப் பெறும் பொருட்டு மேற்குறிப்பிட்ட சட்டம் அரசமைப்புச் சட்டத்தின் **9–**வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது**.**

மேற்படி சட்டத்தினை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில், எண்ணிக்கை அடிப்படையிலான விவரங்களை மாநில அரசு தமிழ்நாடு

பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்குத் தர வேண்டும் எனவும், அதனடிப்படையில் மாநிலத்தில் உள்ள பல்வேறு பிரிவினருக்கும் வழங்கப்பட வேண்டிய இடஒதுக்கீட்டின் அளவினை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் முடிவு செய்ய வேண்டுமென்றும் தீர்ப்பளித்தது. அதன்படி மாநில அரசால் வழங்கப்பட்ட எண்ணிக்கை அடிப்படையிலான விவரங்களை ஆய்வு செய்த தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் 69 விழுக்காடு இடஒதுக்கீடு அளவு சரியென பரிந்துரை அளித்தது. அதன்படி அரசு பணிகளில் நியமனங்கள் மற்றும் கல்வி நிலையங்களில் மாணவ, மாணவியர் சேர்க்கை ஆகியவற்றில் வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல், 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை உறுதி செய்து அரசாணை (நிலை) எண். 50, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள். 11.7.2011–இல் ஆணைகள் வெளியிடப்பட்டன.

## 3. கல்வி

அனைத்து நிலைகளிலும் பின் தங்கியுள்ள மக்களை முன்னேற்றம் பெறச் செய்வதற்கு முக்கிய கருவி கல்வி ஆகும்.

எனவே, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் கல்வியில் முன்னேற்றம் பெற அரசு தனிக்கவனம் செலுத்தி வருகிறது. இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மொத்தத் தொகையில் பெருமளவிலான தொகை கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களுக்காகவே செலவிடப்படுகிறது. இப்பிரிவு மாணவ / மாணவியர்களின் நலனுக்காக விடுதிகளும், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் பிரமலை கள்ளர் இன மாணவ / மாணவியர்களின் கல்வி வளர்ச்சிக்காக கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பிரிவு மாணவ, மாணவியர் நலனுக்காக கல்வி உதவித்தொகைகள் வழங்குதல், சீருடைகள் வழங்குதல் மற்றும் மிதிவண்டிகள் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களையும் அரசு செயல்படுத்தி வருகிறது.

## 4. கல்வி உதவித்தொகைத் திட்டங்கள்

ஏழை எளிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியர் தங்களது கல்வியினை தொடர ஏதுவாக இவ்வரசு பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் இலவசக் கல்வி ஆகிய

மூன்று வகையான கல்வி உதவித்தொகைத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.2 இலட்சம் ஆகும்.

## 4.1 பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கில வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசு உத்தரவிட்டுள்ளதால், இவர்கள் எவ்விதச் சிறப்புக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. மேலும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது. 10 ஆம் வகுப்பு தமிழ்வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணமும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

## ஆங்கில வழிப் படிப்பிற்கான கற்பிப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் ஈடுசெய்தல்

### பிற்படுத்தப்பட்டோர்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியரின் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.2,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் பட்டதாரி எவருமிருக்கக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.20 வீதம் பத்து மாதங்களுக்கு ரூ.200 என்ற அளவிலும், 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.25 வீதம் பத்து மாதங்களுக்கு ரூ.250 என்ற அளவிலும் வழங்கப்படுகிறது. மேலும், 10 ஆம் வகுப்பில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தேர்வுக் கட்டணமும் முழுமையாக ஈடு செய்யப்படுகிறது.

**மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்**

ஆங்கில வழிக் கல்வி படிப்பிற்கான கற்பிப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் அளவிலேயே வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2018–2019** ஆம் ஆண்டில் ரூ.**670.71** இலட்சம் செலவில், **3,48,530** மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு.

| மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/ சீம | மொத்தம் |
| 1,92,572 | 1,55,958 | 3,48,530 | 362.25 | 308.46 | 670.71 |

**2019–2020** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.**234.38** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**235.93** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**470.31** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் தமிழ் மற்றும் ஆங்கில வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசு உத்தரவிட்டுள்ளதால், இவர்கள் எவ்விதச் சிறப்புக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் தமிழ் வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ் வழிக் கல்வி பயிலும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர்**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் ஆங்கில வழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியரின் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.2,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும்

குடும்பத்தில் பட்டதாரி எவருமிருக்கக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு மாதம் ஒன்றுக்கு ரூ.50 வீதம் 10 மாதங்களுக்கு ரூ.500 கற்பிப்புக் கட்டணமாக வழங்கப்படுகிறது. மேலும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பில் ஆங்கில வழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு தேர்வு கட்டணம் மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு முழுமையாக ஈடு செய்யப்படுகிறது.

**மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்**

ஆங்கில வழிக் கல்வி பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்படும் கட்டண அளவிலேயே எவ்வித நிபந்தனையுமின்றி வழங்கப்படுகிறது.

## 4.3 கல்லூரி மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித்தொகை

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த பட்டயப் படிப்பு, ஐ.டி.ஐ, பட்டமேற்படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு

பயிலும் மாணவ, மாணவியரின் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, சிறப்புக் கட்டணம் மற்றும் கற்பிப்புக் கட்டணம், அரசு கல்வி நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட அளவிலும், தேர்வுக் கட்டணம் முழுமையாகவும், புத்தகக் கட்டணம் கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் வழங்கப்பட்டு வருகின்றது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இரண்டாவது முறைமாற்றம் (Second Shift) வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் காலை நேர அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் அதே விதிமுறைகளுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு மேற்படி கல்வி உதவித் தொகையுடன் உண்டி, உறையுள் கட்டணம் வழங்கப்படுகிறது. பட்டப்படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.175 என்ற விகிதத்திலும், தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.350 என்ற விகிதத்திலும், ஐ.டி.ஐ / பட்டயப்படிப்பு மற்றும் முதுகலை

மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.225 என்ற விகிதத்திலும் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு இக்கட்டணம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2018–2019 ஆம் ஆண்டில் ரூ.8,365.21 இலட்சம் செலவில் 2,58,644 மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர். அதன் விவரம் பின்வருமாறு.

| பள்ளி மற்றும் கல்லூரி மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ / சீம | மொத்தம் | பிவ | மிபிவ/ சீம | மொத்தம் |
| 1,40,051 | 1,18,593 | 2,58,644 | 5,264.42 | 3,100.79 | 8,365.21 |

2019–2020 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.5,500 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.3,000 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.8,500 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. இலவசக் கல்வி

### 5.1 பட்டப்படிப்பு

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்று ஆண்டு இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்ப வழங்கப்படாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை அரசு நிர்ணயித்த அளவிலும், புத்தகக் கட்டணம் கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் எவ்வித நிபந்தனையுமின்றி வழங்கப்படுகிறது. இக்கல்வி உதவித்தொகையுடன், கல்வி நிறுவனங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியருக்கு மாதம் ரூ.175 வீதம் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு உண்டி உறையுள் கட்டணம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2018–2019 ஆம் ஆண்டில் 1,80,077 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.3,181.93 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
| 97,455 | 82,622 | 1,80,077 | 1,781.94 | 1,399.99 | 3,181.93 |

**2019–2020** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.**1,781.95** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**1,400** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**3,181.95** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.2 இலவசக் கல்வி – பட்டயப்படிப்பு**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnics) பட்டயப் படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.**2,00,000**–க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டய / பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்ப வழங்கப்படாத கட்டாயக் கட்டணங்கள் அரசு நிர்ணயித்த அளவிலும், புத்தகக்

கட்டணம் கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது. மேலும், கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணவ, மாணவியருக்கு மேற்படி கல்வி உதவித் தொகையுடன் உண்டி, உறையுள் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.225 வீதம் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2018–2019 ஆம் ஆண்டில் ரூ.183.43 இலட்சம் செலவில் 4,687 மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு.

| மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ / சீம | மொத்தம் | பிவ | மிபிவ / சீம | மொத்தம் |
| 2,676 | 2,011 | 4,687 | 107.64 | 75.79 | 183.43 |

2019–2020 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.126.49 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.130 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.256.49 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.3 இலவசக் கல்வி – தொழிற்படிப்பு

அரசு, அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் ஒற்றைச் சாளர முறையில் தேர்வு செய்யப்பட்டு தொழிற்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் அவர்களது குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் அரசு நிர்ணயித்த அளவிலும், புத்தகக் கட்டணம் கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது. மேலும், கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணவ, மாணவியருக்கு மேற்படி கல்வி உதவித் தொகையுடன் உண்டி, உறையுள் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.350 வீதம் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2018–2019** ஆம் ஆண்டில் ரூ.**7,673.97** இலட்சம் செலவில், **1,48,864** மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு.

| **மாணவ/மாணவியர் எண்ணிக்கை** | | | **செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)** | | |
|---|---|---|---|---|---|
| **பிவ** | **மிபிவ/ சீம** | **மொத்தம்** | **பிவ** | **மிபிவ/ சீம** | **மொத்தம்** |
| 91,792 | 57,072 | 1,48,864 | 4,741.58 | 2,932.39 | 7,673.97 |

**2019–2020** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.**5,281.57** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**3,300** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**8,581.57** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.4 இணையதளம் மூலம் கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு செய்தல்

கல்லூரிகளில் பயிலும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை தேசிய தகவல் மையத்தால் உருவாக்கப்பட்ட www.escholarship.tn.gov.in என்ற இணையதளம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. கல்வி உதவித் தொகைகள் அந்தந்த

துறைத் தலைமை அலுவலகங்கள் மூலமாகவே மையப்படுத்தப்பட்ட பணம் செலுத்தும் முறையில் மாணவ / மாணவியரின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக மின்னணு பரிமாற்றம் (ECS) மூலம் வரவு வைக்கப்படுகிறது.

## 6. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த கிராமப்புற பள்ளி மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல்

பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் கல்வியே முதல்படியாகும். கிராமப்புற பெண் குழந்தைகளிடையே கல்வியை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும், ஆரம்பக்கல்வி நிலையில் பெண் குழந்தைகள் படிப்பை இடையில் நிறுத்துவதை குறைக்கவும், 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவியர் ஒருவருக்கு வருடத்திற்கு ரூ.500 என்ற வீதத்திலும், 6 ஆம் வகுப்பில் பயிலும் மாணவியர் ஒருவருக்கு வருடத்திற்கு ரூ.1000 என்ற வீதத்திலும் ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 2017–2018 ஆண்டு முதல் ரூ.72,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் **2018–2019** ஆம் ஆண்டில் ரூ.**1,588.26** இலட்சம் செலவில் **2,46,302** மாணவியர் பயனடைந்துள்ளனர்.

**2019–2020** ஆம் ஆண்டிற்கு ரூ.**1,434.50** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. விடுதிகள்

நலிவுற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியரின் நலனுக்காக இம்மாணவர்கள் கல்வியினை தடையின்றி தொடர ஏதுவாக **1,348** விடுதிகள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் **738** விடுதிகளும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் கீழ் **594** விடுதிகளும் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் **16** விடுதிகளும் இயங்கி வருகின்றன. மொத்தமுள்ள **1,348** விடுதிகளுள் **1,106** பள்ளி விடுதிகளாகும் மற்றும் **242** கல்லூரி விடுதிகளாகும். இதேபோன்று மாணவர் விடுதிகள் மற்றும் மாணவியர் விடுதிகளின் எண்ணிக்கை முறையே **843** மற்றும் **505** ஆகும். இவ்விடுதிகளில் ஆண்டுதோறும் **85,314** மாணவ / மாணவியர்

தங்கிப் பயின்று பயனடைந்து வருகின்றனர். பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.1,00,000—க்கு மிகாமல் உள்ள மாணவ, மாணவியர் விடுதிகளில் சேர தகுதி பெற்றவர்களாவர். விடுதி மாணவ, மாணவியர் உணவுக்கான கட்டணம் உட்பட எவ்வித கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. மாணவ, மாணவியருக்கான விடுதி செலவினம் முழுவதையும் அரசே ஏற்கிறது.

இவ்விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவியரின் எண்ணிக்கைக்குக் கூடுதலாக 10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரின் அதிகாரத்திற்குட்பட்ட கூடுதல் இடங்கள் அனுமதிக்கப்பட்ட பின்னரும், தேவை அதிகரிப்பின் விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக, மொத்தம் 2,185 மாணவ, மாணவியரைச் சேர்த்திட, துறை தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு ஒவ்வொரு விடுதியிலும் 5 இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளன.

**2012–2013** ஆம் ஆண்டு முதல், தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டு கேரள எல்லையோரப் பகுதியில் உள்ள மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளை தேனி மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக, சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக, அவர்களின் பெற்றோர் அளிக்கும் சுய உறுதி மொழி ஏற்கப்படுகிறது .

## 7.1 புதிய விடுதிகள் திறப்பு

**2018–2019** ஆம் ஆண்டில் ஒவ்வொரு விடுதியிலும் **100** மாணவ/மாணவியர் தங்கும் வகையில் புதிதாக **5** கல்லூரி விடுதிகள் துவக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மொத்தம் **500** மாணவ / மாணவியர் கூடுதலாக பயன்பெறுகின்றனர்.

## 7.2 உணவுக் கட்டணம்

பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கான உணவுக் கட்டணம் மாதம் ரூ.**755**–லிருந்து ரூ.**900** ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கான மாதாந்திர உணவுக் கட்டணம் ரூ.**875**–லிருந்து ரூ.**1,000** ஆகவும் **1.6.2017** முதல் உயர்த்தப்பட்டுள்ளது. பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு

வழங்குவதற்கு பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.20–ம், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.40–ம் வழங்கப்படுகிறது. சோப்பு மற்றும் எண்ணெய் போன்றவற்றிற்காக மாதாந்திர பல்வகை செலவினம் பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.50 ஆகவும், கல்லூரி விடுதி மாணவ/மாணவியருக்கு ரூ.75 ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது.

2018–2019 ஆம் ஆண்டில் விடுதிகளின் உணவுக் கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற செலவினங்களுக்காக ரூ.25,224.12 இலட்சம் செலவிடப்பட்டது.

2019–2020 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.14,458.21 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.12,446.56 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.26,904.77 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 7.3 விடுதி மாணவ, மாணவியர் பெறும் இதர பயன்கள்

1. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்குப் பன்னிரெண்டாம் வகுப்பு வரை

அனைத்து பாடப்புத்தகங்களும் விலையில்லாமல் பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

2. விடுதிகளில் தங்கிப்பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றிட, அவர்களுக்கு விலையில்லா சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கப்படுகின்றன.

3. ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு ஆங்கிலம் மற்றும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.

4. 4 முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப்பயிலும் மாணவ, மாணவியருக்கு, மதிய உணவு திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படுவதைப் போன்ற வண்ணம் மற்றும் வடிவமைப்பில் நான்கு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன.

5. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் நூலகப் புத்தகங்கள், புத்தக அலமாரிகள், விளையாட்டு பொருட்கள், வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி, மாவரைக்கும் இயந்திரம், மின்அரைப்பான், நீர் சுத்திகரிப்புக் கருவி, சுகாதார குட்டைத்தகளி,

தீயணைப்பான் கருவிகள், இட்லி வேகவைப்பான்கள் மற்றும் பூச்சி அழிப்பான் மின் கருவி ஆகியன வழங்கப்படுகின்றன. இவற்றுடன் கல்லூரி விடுதிகளுக்கு இரண்டடுக்கு கட்டில்கள், இன்வர்ட்டர் கருவி, பார்வை குறிப்புப் புத்தகங்கள், உடனடி மாவரைக்கும் இயந்திரம் மற்றும் நீராவி கொதிக்கலன் வழங்கப்படுகின்றன.

6. விடுதி மாணவ, மாணவியருக்கு பாய்கள், ஜமக்காளங்கள், போர்வைகள், எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வழங்கப்படுகின்றன.

7. மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதி மாணவ, மாணவியருக்கு கம்பளி ஆடை வழங்கப்படுகிறது.

8. ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒன்று என்ற வீதத்தில் விடுதி மாணவ, மாணவியருக்கு வாரத்திற்கு ஐந்து நாட்கள் வேகவைத்த முட்டைகள் வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

9. அனைத்து விடுதிகள் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவ, மாணவியருக்கு ஆண்டு தோறும்

மூன்று மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

10. ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் புதன்கிழமைகளில் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும் நான்காம் புதன்கிழமைகளில் கோழி இறைச்சியும் வழங்கப்படுகின்றன.

11. மாலை நேர சிற்றுண்டியாக தினந்தோறும் சுண்டல் மற்றும் சுக்குமல்லி காபி / தேநீர் வழங்கப்படுகின்றன.

12. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு வேலைவாய்ப்புகள் பெறுவதற்காக நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**7.4 2018–2019 ஆண்டில் விடுதிகளின் மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட புதிய திட்டங்கள்**

1. 5 புதிய கல்லூரி விடுதிகள் ரூ.209.18 இலட்சம் செலவில் துவங்கப்பட்டுள்ளன.

2. **6** பள்ளி விடுதிகள் கல்லூரி விடுதிகளாக ரூ.**14.85** இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

3. கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் UPSC, TNPSC, TRB, RRB போன்ற போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் பொருட்டு **231** கல்லூரி விடுதிகளுக்கு ரூ.**57.75** இலட்சம் செலவில் புத்தகங்கள் வழங்குதல்.

4. **21** மாணவியர் விடுதிகளுக்கு, ரூ.**235.28** இலட்சம் செலவில் சுற்றுச் சுவர் கட்டப்பட்டது.

5. ஒரு சமையலர் பணியிடம் மட்டுமே ஒப்பளிக்கப்பட்ட **196** விடுதிகளுக்கு கூடுதலாக ஒரு சமையலர் பணியிடம் ரூ.**415.48** இலட்சம் செலவில் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

6. **5** வருடங்களுக்கு முன்னர் சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ள **99** கல்லூரி விடுதிகளுக்கு அவசர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வழங்கப்படும் தொகை

**15,000** ரூபாயிலிருந்து **20,000** ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

7. இத்துறையின் கீழ் செயல்படும் விடுதிகளுள் வியாபார ரீதியிலான இட்லி வேகவைப்பான்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள விடுதிகள் தவிர எஞ்சிய **262** விடுதிகளுக்கு வியாபார ரீதியிலான இட்லி வேகவைப்பான்கள் ரூ.**41.92** இலட்சம் செலவில் வழங்குதல்.
8. **502** மாணவியர் விடுதிகளுக்கு ரூ.**502** இலட்சம் செலவில் கண்காணிப்பு கேமரா (CCTV) பொருத்துதல் .
9. விடுதிகளுக்கான பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள கூடுதலாக ரூ.**5** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

## 8. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம்

அரசால் அங்கீகரிக்கப்பட்ட **39** தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.**50,000**–க்கு மிகாமல் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. உணவு மானியத் தொகை 2018–2019 ஆம் ஆண்டு முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.650–லிருந்து ரூ.900 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2018–2019 ஆம் ஆண்டில் ரூ.83.62 இலட்சம் செலவில் 929 மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு.

| மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/ சீம | மொத்தம் | பிவ | மிபிவ/ சீம | மொத்தம் |
| 487 | 442 | 929 | 43.84 | 39.78 | 83.62 |

2019–2020 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.50 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.50 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9. சிறந்த காப்பாளர்கள் / காப்பாளினிகளுக்கு மாநில அளவிலான விருதுகள் வழங்குதல்

ஆண்டுதோறும் விடுதிகளை செம்மையான முறையில் பராமரிக்கும் காப்பாளர்கள் / காப்பாளினிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, மாநில அளவில் சிறந்த காப்பாளர்கள் / காப்பாளினிகள் தேர்வு செய்யப்பட்டு முதல் பரிசாக ரூ.5,000, இரண்டாம் பரிசாக ரூ.3,000 மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.2,000 வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2018–2019 ஆம் ஆண்டில் ரூ.0.10 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்திற்கு 2019–2020 ஆம் ஆண்டில் ரூ.0.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

இத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் 1,348 விடுதிகளில் 1,277 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன மற்றும் 71 விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 25 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, பொதுப்பணித்துறை மூலம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று

வருகின்றன. எஞ்சிய 46 விடுதிகளுக்கு சொந்த கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த மூன்றாண்டுகளில் 86 விடுதிகளுக்கான கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

2018–2019 ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகளுக்காக ரூ.1,793.10 இலட்சம் செலவிடப்பட்டது.

2019–2020 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.185.92 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.84.40 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.270.32 இலட்சம் விடுதிகளுக்கு கட்டடம் கட்டுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11. விடுதி கட்டடங்கள் பராமரிப்பு

அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளின் பராமரிப்பு பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிகளுக்காக ஆண்டு தோறும் ரூ.600 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2018–2019 ஆம் ஆண்டில் 150 விடுதிகளின் பராமரிப்பு பணிகள் ரூ.600 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன. இது தவிர 2018–2019 ஆம் ஆண்டில் விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகளுக்கு என ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 81 விடுதிகளில் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகள் பொது பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டன.

2019–2020 ஆம் ஆண்டில் விடுதிகளின் பராமரிப்பு பணிகளுக்காக ரூ.600 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்

பிரமலை கள்ளர் வகுப்பினரின் கல்வி நிலையினை மேம்படுத்தும் பொருட்டு, அவ்வகுப்பினர் பெருமளவில் வாழும் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை இத்துறை நடத்தி வருகிறது. தற்போது 295 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் (213 தொடக்கப் பள்ளிகள், 22 நடுநிலைப் பள்ளிகள், 22 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 38 மேல்நிலைப் பள்ளிகள்) இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் 24,895 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

இம்மாணவ, மாணவியருக்கு அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுவதைப் போன்று, சிறப்பு ஊக்கத் தொகை, காலணி, மடிக்கணினி, புத்தகப்பை, கணித உபகரணப்பெட்டி, வண்ணப் பென்சில்கள் மற்றும் உலக வரைபடப் புத்தகம் ஆகியன பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன. 2018–2019 ஆம் கல்வியாண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி விகிதம் 94.9%, 11 ஆம் வகுப்பு தேர்ச்சி விகிதம் 96.5% மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி விகிதம் 96.8% ஆகும்.

2011–2012 ஆம் ஆண்டு முதல் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் தலா 5 பள்ளிகள் வீதம் மொத்தம் 15 ஆரம்பப் பள்ளிகளில், ஆங்கில வழி மழலையர் வகுப்புகள் (LKG) தொடங்கப்பட்டன. இப்பள்ளிகளில் தற்போது ஐந்தாம் வகுப்பு வரை ஆங்கில வழி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இவ்வகுப்புகளில் 818 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

2018–2019 ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் செயல்பாட்டிற்காக ரூ.10,626.34 இலட்சம்

செலவிடப்பட்டுள்ளது. **2019–2020** ஆம் ஆண்டிற்கு ரூ.**12,095.04** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 12.1 கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்கள் பராமரிப்பு

கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்காக ஆண்டுதோறும் ரூ.**1** கோடி அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது. **2018–2019** ஆம் ஆண்டில் **21** கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2019–2020** ஆம் ஆண்டிற்கும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் கட்டட பராமரிப்புக்காக ரூ.**1** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 12.2 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / ஆசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டம்

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் **10** மற்றும் **12** ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியரை அரசுப் பொதுத் தேர்வில் **95** விழுக்காடு மற்றும் அதற்கு அதிகமாக தேர்ச்சி பெறச் செய்யும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தலா ரூ.**10,000** பரிசுத்தொகை

மற்றும் நற்சான்றிதழ் வழங்கும் திட்டம் **2011–2012** ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதேபோல் கள்ளர் சீரமைப்பு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் **10** மற்றும் **12** ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் தத்தமது பாடப்பிரிவில் **100** விழுக்காடு மாணவ, மாணவியரை தேர்ச்சி பெறச் செய்யும் முதுகலைப் பட்டதாரி மற்றும் இளங்கலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு தலா ரூ.**5,000** பரிசுத் தொகை வழங்கும் திட்டம் **2014–2015** ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

**2018–2019** ஆம் ஆண்டில் தலைமையாசிரியர்கள் / ஆசிரியர்களுக்கு ரூ.**26.60** இலட்சம் பரிசு தொகைகளுக்காக செலவிடப்பட்டது.

**2019–2020** ஆம் ஆண்டிற்கு இத்திட்டங்களுக்காக ரூ.**22** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 12.3 2018–2019 ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்ட புதிய திட்டங்கள்

1. **292** கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு விளையாட்டு பொருட்கள் ரூ.**38.63** இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

2. 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் நிலை உயர்த்தப்பட்டுள்ளன (4 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 3 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் 3 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன).

## 13. சீருடைகள்

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 4 விலையில்லா இணை சீருடைகள் சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையால் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் தங்கி 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 4 விலையில்லா இணை சீருடைகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. இச்சீருடைகள் வண்ணம் மற்றும் வடிவமைப்பில் அரசுப் பள்ளிகளில் பின்பற்றப்படுவது போலவே வழங்கப்படுகின்றன. சீருடைக்கான துணிகள் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து கொள்முதல்

செய்யப்பட்டு, மாவட்ட மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தைத்து வழங்கப்படுகின்றன.

**2018–2019** ஆம் ஆண்டில் மொத்தம் **37,808** மாணவ, மாணவியருக்கு ரூ.**469.71** இலட்சம் செலவில் சீருடைகள் வழங்கப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

| **மாணவ / மாணவியர் எண்ணிக்கை** | | | **செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)** | | |
|---|---|---|---|---|---|
| **பிவ** | **மிபிவ / சீம** | **மொத்தம்** | **பிவ** | **மிபிவ / சீம** | **மொத்தம்** |
| **20,291** | **17,517** | **37,808** | **244.98** | **224.73** | **469.71** |

**2019–2020** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**200** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.**224.73** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**424.73** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 14. மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

மேல்நிலைக் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் அரசு, அரசு நிதியுதவி பெறும் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில் **11** ஆம் வகுப்பு பயிலும்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு பொருளாதார உச்ச வரம்பின்றி விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள விடுதியில் தங்கியுள்ளோர் மற்றும் உண்டி உறைவிடப்பள்ளி மாணவ, மாணவியர் விலையில்லா மிதிவண்டிகள் பெறத் தகுதியற்றவர் ஆவர். மிதிவண்டிகள் வழங்குவது www.agaram.tn.gov.in/freecycles இணையதளம் மூலம் கண்காணிக்கப்படுகிறது.

2017–2018 ஆம் கல்வியாண்டில் 11 ஆம் வகுப்பு பயின்ற மாணவ, மாணவியருக்கும், 2018–2019 ஆம் கல்வியாண்டில் 11 ஆம் வகுப்பு பயின்ற மாணவ, மாணவியருக்கும் மிதிவண்டிகள் வழங்கப்பட்டன. மேற்கண்ட இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்ட 7,39,636 மிதிவண்டிகள் உட்பட மொத்தம் 10,87,147 மிதிவண்டிகள் 2018–2019 இல் வழங்கப்பட்டுள்ளன.

**2018–2019** ஆம் ஆண்டில் **7,39,636** மாணவ/மாணவியருக்கு ரூ.**26,683.34** இலட்சம் செலவில் பின்வருமாறு மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

| பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/ சீம | மொத்தம் | பிவ | மிபிவ/ சீம | மொத்தம் |
| 3,95,200 | 3,44,436 | 7,39,636 | 13,890.47 | 12,792.87 | 26,683.34 |

**2019–2020** ஆம் ஆண்டிற்கு, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.**7,300** இலட்சம், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**6,548.11** இலட்சம் ஆக மொத்தம் ரூ.**13,848.11** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 15. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

### 15.1 சலவைப் பெட்டிகள் வழங்குதல்

ஏழ்மை நிலையிலுள்ள சலவைத் தொழில் செய்யும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த விலையில்லா சலவைப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளிகளின் ஆண்டு வருமானம் ரூ.72,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2018–2019 ஆம் ஆண்டில் ரூ.104.97 இலட்சம் செலவில் 1,965 சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

2019–2020 ஆம் ஆண்டிற்கு ரூ.105 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**15.2 தையல் இயந்திரங்கள் வழங்குதல்**

ஏழ்மை நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த விலையில்லா தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. 2018–2019 ஆம் ஆண்டில் இத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு கால்களால் இயக்கப்படும் தையல் இயந்திரங்களுக்கு பதிலாக 3,000 மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளிகளின் ஆண்டு வருமானம் ரூ.72,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2019–2020 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.48 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.52.80 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.100.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**15.3 வீட்டு மனை வழங்குதல்**

வீட்டு மனையற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு வீட்டு மனைகள் விலையேதுமின்றி வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற ஆண்டு வருமானம் கிராமப்புறங்களைப் பொறுத்த வரை ரூ.40,000–க்கு மிகாமலும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை ரூ.60,000–க்கு மிகாமலும் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை 2017–2018 ஆம் ஆண்டு முதல் கிராமப்புற மற்றும் நகர்ப்புற என இருதரப்பு பயனாளிகளுக்கும் ரூ.72,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2018–2019 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 474 பயனாளிகளுக்கு வீட்டுமனைகள் ரூ.220.75 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

**2019–2020** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**200** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.**150** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**350** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16. சீர்மரபினர் நல வாரியம்

சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக “சீர்மரபினர் நல வாரியம்” அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

**சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்**

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை |
|---|---|---|---|
| 1. | அ) | **விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை**<br>விபத்தினால் ஏற்படும் மரணம் | ரூ.1,00,000 |

| | | | |
|---|---|---|---|
| | ஆ) | விபத்தினால் ஏற்படும் ஊனம் | ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை |
| 2. | | இயற்கை மரணம் | ரூ.15,000 |
| 3. | | ஈமச்சடங்கு செலவினம் | ரூ.2,000 |
| 4. கல்வி உதவித்தொகை | | | |
| | அ) | 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |
| | ஆ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு | ரூ.1,000 |
| | இ) | 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |
| | ஈ) | 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,500 |
| | உ) | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,500 |
| | ஊ) | (i) முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,500 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,750 |
| | எ) | (i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.5,000 |
| | ஏ) | (i) தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | ரூ.4,000 |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | ரூ.6,000 |
| | ஐ) | (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.6,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.8,000 |
| | ஒ) | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,200 |
| 5. | | திருமண உதவித்தொகை | ரூ.2,000 |
| 6. மகப்பேறு உதவித்தொகை | | | |
| | அ) | மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் 6 மாதங்களுக்கு | ரூ.6,000 |
| | ஆ) | கருச்சிதைவு /கருக்கலைப்பு | ரூ.3,000 |
| 7. | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ.500 வரை |
| 8. | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | ரூ.1,000 |

**2018–2019** ஆம் ஆண்டு வரை இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள **3,016** உறுப்பினர்களுக்கு ரூ.**62.41** இலட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 17. தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்

நரிக்குறவர்களுக்கு கல்வி, மாற்று தொழில் புரிவதற்கான உதவி ஆகியவற்றை அளிக்கவும், அவர்களுக்கு பல்வேறு நல உதவிகள் வழங்குவதற்கும் என தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் செயல்பட்டு வருகிறது. இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் தனிநபராகத் தொழில் துவங்க ரூ.7,500 மானியமும், குழுவாகத் தொழில் துவங்க அதிகபட்சமாக ரூ.1,25,000 பின்நிகழ்வு மானியமும் (Back ended subsidy) வழங்கப்படுகிறது. இவ்வாரியத்திற்கென இதுவரை ரூ.940 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்

| வ.எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை |
|---|---|---|---|
| 1. | | **விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் உதவித்தொகை** | |
| | அ) | விபத்தினால் ஏற்படும் மரணம் | ரூ.1,00,000 |
| | ஆ) | விபத்தினால் ஏற்படும் ஊனம் | ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை |
| 2. | | இயற்கை மரணம் | ரூ.15,000 |
| 3. | | ஈமச்சடங்கு செலவினம் | ரூ.2,000 |
| 4. கல்வி உதவித்தொகை | | | |
| | அ) | ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு | ரூ.500 |
| | ஆ) | 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு | ரூ.1,000 |
| | இ) | 10ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |
| | ஈ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,000 |

| | | | |
|---|---|---|---|
| | உ) | 11 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |
| | ஊ) | 12 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,500 |
| | எ) | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,500 |
| | ஏ) | (i) முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,500 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,750 |
| | ஐ) | (i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.5,000 |
| | ஒ) | (i) தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | ரூ.4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | ரூ.6,000 |
| | ஓ) | (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.6,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டமேற்படிப்பிற்கு | ரூ.8,000 |

| | | | |
|---|---|---|---|
| | ஔ) | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப்படிப்பிற்கு | ரூ.1,200 |
| 5. | | திருமண உதவித்தொகை | ரூ.2,000 |
| 6. | | மகப்பேறு உதவித்தொகை | |
| | அ) | மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் 6 மாதங்களுக்கு | ரூ.6,000 |
| | ஆ) | கருச்சிதைவு / கருக்கலைப்பு | ரூ.3,000 |
| 7. | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ.500 வரை |
| 8. | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | ரூ.1,000 |
| 9. | அ) | தனி நபர் தொழில் தொடங்க மானியம் | ரூ.7,500 |
| | ஆ) | குழுவாக தொழில் தொடங்க மானியம் | ரூ.10,000 தனி நபருக்கு<br>(அல்லது)<br>ரூ.1,25,000 அதிகபட்சமாக குழுவிற்கு |

**2018–2019** ஆம் ஆண்டு வரை இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள **13,388** உறுப்பினர்களுக்கு ரூ.**776.72** இலட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**2019–2020** ஆம் ஆண்டிற்கு, ரூ.**100** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 18. சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது

தமிழ்நாட்டில் சமூக நீதிக்காகப் மிகச்சிறந்த முறையில் பங்காற்றியவர்களை சிறப்பு செய்யும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது **1994** ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. ஆண்டுதோறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்படும் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. இவ்விருது ஒரு சவரன் தங்கப் பதக்கமும், ரூ.**1** இலட்சம் பொற்கிழியும் கொண்டதாகும். **2018** ஆம் ஆண்டு சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது திரு.சி.பொன்னையன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**2019–2020** ஆம் ஆண்டிற்கு ரூ.**1.50** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 19. தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் நிருவாகக் குழுமம்

தமிழ்நாட்டில், வன்னியர் சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காக, பல வன்னியர் வள்ளல்களால் உயிலாக எழுதி வைக்கப்பட்ட அறக்கட்டளைகளை அடையாளம் கண்டு, அவைகளை ஒருங்கிணைத்து, அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்காக, அரசு வன்னியர் பொதுச் சொத்து நல வாரியத்தை உருவாக்கியது.

அத்தகைய பொறுப்பாட்சி அமைப்புகள் மற்றும் நிலைக் கொடை அமைப்புகளைக் காத்திடவும் அவற்றைப் பேணுவதிலும் அக்கறை கொண்ட சமுதாய ஆர்வலர்கள் இத்தகைய பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகளை ஒருங்கிணைக்கவும், பாதுகாக்கவும் தனியாக சட்டம் ஒன்றை இயற்றக் கோரி அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

அரசு ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின்னர் வன்னிய குல சத்திரியர் சமுதாயத்தைச் சேர்ந்த நபர்களால் அல்லது நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட அத்தகைய பொறுப்பாட்சிகளின் சொத்துக்களையும்,

நிலைக்கொடைகளின் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கு நிருவாகக்குழுமம் ஒன்றை அமைத்துருவாக்குவதெனவும், இந்த நோக்கத்திற்காக தனிச்சட்டம் ஒன்றை இயற்றுவதெனவும் முடிவு செய்து, தமிழ்நாடு வன்னிய குல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டம் **2018**'' என்கிற புதிய சட்டத்தினை இயற்றியது. இச்சட்டமானது **04.02.2019** அன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இச்சட்டத்தின் கீழ் ''தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப்பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் நிருவாகக் குழுமம்'' ஒரு தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்களுடன் இவ்வரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதிதாக அமைக்கப்பட்ட நிர்வாகக் குழுமத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உறுப்பினர் – செயலாளர் ஒருவரையும் அரசு நியமித்துள்ளது. மேலும், **22** புதிய பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இவ்வாரியம் சீரிய முறையில் செயல்படும் பொருட்டு, ஒரு முறை மானியமாக ரூ.**1** கோடியும் மற்றும் தொடர் மானியமாக ரூ.**25** இலட்சமும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 20. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த தனி நபர்கள் மற்றும் குழுக்கள் தங்களது பொருளாதார முன்னேற்றத்திற்காக சாத்தியக் கூறுள்ள சிறு தொழில்கள், வியாபாரம் ஆகியவற்றைச் செய்ய குறைந்த வட்டி விகிதத்தில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் நிதியுதவி வழங்கி வருகிறது. 1982 ஆம் ஆண்டு இந்நிறுவனம் அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் இந்திய கம்பெனிகள் சட்டம் 1956–ன் கீழ் பதிவுபெற்ற ஒரு அரசுத்துறை நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.30 கோடி. இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.12.27 கோடி. இந்நிறுவனம், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. இக்கழகம் செயற்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து, தமிழ்நாடு அரசின் பொறுப்புறுதியின் மீது கடனாகப் பெறுகிறது.

### 20.1 கடன் திட்டங்கள்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தனி நபர்கள் மற்றும் சுயஉதவிக்

குழுக்களுக்கு கடனுதவி வழங்கி வருகிறது. கடன் திட்டங்களுக்கான பயனாளிகளை, அந்தந்த மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான இணைப்பதிவாளர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், மாவட்ட தொழிற்மையத்தின் பொது மேலாளர் மற்றும் அந்தந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் ஆகியோரைக் கொண்ட குழு தெரிவு செய்கிறது. கடன் திட்டங்களுக்கான அனுமதி மற்றும் நிதி, கூட்டுறவு வங்கிகள் / கூட்டுறவு சங்கங்கள் மூலம் விடுவிக்கப்படுகிறது.

கடன் திட்டங்களுக்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ.3,00,000 இலட்சமாக 1.4.2018 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

### 20.1.1 பொது காலக் கடன் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் சிறு வணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வரை ஆண்டுக்கு 6 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. ரூ.5 இலட்சத்திற்கு மேல் ரூ.10 இலட்சம் வரை ஆண்டுக்கு 7 விழுக்காடு வட்டி விகிதத்திலும் ரூ.10 இலட்சத்திற்கு மேல் ரூ.15 இலட்சம் வரை ஆண்டுக்கு 8 விழுக்காடு வட்டி

விகிதத்திலும் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்தும் கால அவகாசம் 3 முதல் 8 ஆண்டுகளாகும்.

### 20.1.2 பெண்களுக்கான புதிய பொற்காலத் திட்டம்

பெண்களின் சுயசார்பு பண்பினை வளர்க்கும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சிறு வணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூ.2,00,000 வரை ஆண்டுக்கு 5 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்தும் கால அவகாசம் 3 முதல் 8 ஆண்டுகளாகும்.

### 20.1.3 பெண்களுக்கான நுண் கடன் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.1,00,000 வரை ஆண்டுக்கு 4 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்த வேண்டிய கால அவகாசம் 4 ஆண்டுகளாகும்.

### 20.1.4 ஆண்களுக்கான நுண் கடன் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ஆண்கள் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.1,00,000 வரை ஆண்டுக்கு 5 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்த வேண்டிய கால அவகாசம் 4 ஆண்டுகளாகும்.

2012–2013 ஆம் ஆண்டு முதல் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம், சிறு விவசாயிகள் மற்றும் காய்கறிகள் பயிரிடுவோருக்கான சிறு கடன் திட்டம், மரபுசார் கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கான சுய தொழில் காலக் கடன் திட்டம், இளம் தொழிற் பட்டதாரிக்கான காலக் கடன் திட்டம் ஆகிய புதிய கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டங்களின் கீழ், 2018–2019 ஆம் ஆண்டில் 14,908 பயனாளிகளுக்கு ரூ.7,870.67 இலட்சம் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பயனாளிகள் எண்ணிக்கை | கடன்தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | பொதுக்கால கடன் திட்டம் | 479 | 642.34 |
| 2. | பெண்களுக்கான புதிய பொற்கால திட்டம் | 308 | 146.90 |
| 3. | பெண்களுக்கான நுண் கடன் திட்டம் | 13,568 | 6,842.98 |
| 4. | ஆண்களுக்கான நுண் கடன் திட்டம் | 553 | 238.45 |
| **மொத்தம்** | | **14,908** | **7,870.67** |

**2019–2020** ஆம் ஆண்டிற்கு பல்வேறு திட்டங்களின் கீழ், ரூ.**100** கோடி அளவில் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 20.2 சிறு, குறு விவசாயிகளுக்கான மானியம் மற்றும் கடன் திட்டம்

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் / தேசிய

மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் **50** விழுக்காடு மானியத்துடன் அதிகபட்சம் ரூ.**1,00,000** வரை கடன் வழங்கப்படுகிறது. இதுவரை **3,180** சிறு, குறு விவசாயிகளுக்கு மானியமாக ரூ.**1,460.25** இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

## 21. <u>தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்</u>

இந்திராசஹானி மற்றும் பிறர் – எதிர் – இந்திய யூனியன் மற்றும் பிறர் (J.T. 1992 (6) SC 273) என்கிற மண்டல் வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த வழிகாட்டுதல்களின் அடிப்படையில் ஒரு நிலையான அமைப்பாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டு, **15.3.1993** முதல் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

**2.** தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பணிகள் நீதிமுறை–சார்புடைய (quasi-judicial) தன்மை வாய்ந்தது. இவ்வாணையத்தின் செயல்வரம்புகளாவன:–

(i) பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோருதல் தொடர்பான மனுக்கள் மற்றும் பட்டியல்களில்

மிகுதியாக சேர்க்கப்பட்டிருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்தான முறையீடுகள் ஆகியவற்றைப் பெற்று, ஆய்வு செய்து மற்றும் அதன்மீது பரிந்துரைகளை ஆணையம் வழங்குதல்;

(ii) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்தல்;

(iii) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு **16(4)** மற்றும் இதர பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும், இப்பொருள் தொடர்பாக உச்சநீதிமன்றம் எடுத்துள்ள பல்வேறு முடிவுகளையொட்டியும் ஆணையத்தின் பரிந்துரைகள் அமையவேண்டும்;

(iv) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருள்கள் பிறவற்றையும் ஆய்வுசெய்து பரிந்துரை வழங்குதல்.

# 22. சிறுபான்மையினர் நலன்

தமிழகத்தில் உள்ள சிறுபான்மையின மக்களின் உரிமைகளைக் காப்பதற்காகவும், அவர்தம் கல்வி மற்றும் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் விதத்திலும் பல்வேறு நலத்திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. சிறுபான்மையினரை பெரும்பான்மையினருக்கு நிகராக மேம்பாடு அடையச் செய்வதே இவ்வரசின் நோக்கமாகும்.

## 22.1 தனி இடஒதுக்கீடு

பிற்படுத்தப்பட்டோர் இனத்தவர்களுக்கான 30 விழுக்காடு இடஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு 3.5 விழுக்காடு தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அரசுப் பணிகளில் நேரடிநியமனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு முன்கொணர்வு முறையினை (Carry forward procedure) பின்பற்றிட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.

## 22.2 கல்வி உதவித் தொகை

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் கிறித்தவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் ஜைன மதங்களைச் சார்ந்த மாணவ / மாணவியருக்கு மத்திய அரசின் கீழ்க்கண்ட கல்வி உதவித் தொகை திட்டங்களை இவ்வரசு தொடர்ந்து செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

1. பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டம்
2. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டம்
3. தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை திட்டம்

இக்கல்வி உதவி தொகைத் திட்டங்களால் ஒன்றாம் வகுப்பு முதல் தொழிற்கல்வி/ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியர் பயன் பெறுகின்றனர். மத்திய அரசின் 100% நிதி பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு, பள்ளிப்படிப்பு கல்வி உதவித்

தொகை திட்டத்திற்கு ரூ. 1 இலட்சத்திற்கு மிகாமலும், பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்திற்கு ரூ.2 இலட்சத்திற்கு மிகாமலும், தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை திட்டத்திற்கு ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில் 50 விழுக்காட்டிற்கு குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருக்கும் மாணவ / மாணவியர் இத்திட்டங்களின் கீழ் பயன்பெறுவர். மொத்த ஒதுக்கீட்டில் 30 விழுக்காடு மாணவியருக்கென ஒதுக்கீடு செய்யப்படும். மேற்படி திட்டங்களின் கீழ் கல்வி உதவித்தொகை நேரடி பணபரிமாற்றம் முறையில் (DBT-Direct Benefit Transfer) மாணவ/மாணவியரின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

### 22.2.1 பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை

இக்கல்வி உதவித் தொகை ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ / மாணவியருக்கு ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயில்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு சேர்க்கை கட்டணம் ரூ.500 வரையிலும்,

கற்பிப்புக் கட்டணம் ரூ.3,500 வரையிலும் வழங்கப்படுகிறது. தவிர, பராமரிப்பு கட்டணமாக, 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு மாதம் ரூ.100 வீதமும், 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு மாதம் ரூ.600 வீதமும், ஒரு கல்வி ஆண்டில் அதிகபட்சமாக 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2018–2019 ஆம் ஆண்டில் 3,24,556 மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.6,674.51 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 22 .2.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை

இக்கல்வி உதவித் தொகை பதினோறாம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பாடப்பிரிவிற்கு ஏற்றவாறு கல்வி உதவித்தொகையில் சேர்க்கை மற்றும் கற்பிப்புக் கட்டணத்திற்காக ரூ.3,000 முதல் ரூ.10,000 வரையிலும், பராமரிப்புக் கட்டணத்திற்காக விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு ரூ.2,300 முதல் ரூ.5,500 வரையிலும், விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு

ரூ.3,800 முதல் ரூ.12,000 வரையிலும் ஒரு கல்வி ஆண்டிற்கு வழங்கப்படுகிறது.

2018–2019 ஆம் ஆண்டில் 34,667 மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.2,051.88 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 22.2.3 தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம்

தொழிற்கல்வி / தொழில்நுட்பக் கல்வி பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியர் அதிக அளவில் மதிப்பெண்கள் பெற்று கல்வி பயிலுவதை ஊக்குவிக்கும் நோக்கில் இக்கல்வி உதவித் தொகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்லூரிகளில், தொழிற்கல்வி மற்றும் தொழில் நுட்பக்கல்வி பயிலும் மாணவ / மாணவியருக்கு அதிகபட்சமாக ரூ.20,000 வரை கல்வி கட்டணம் வழங்கப்படுகிறது. சிறுபான்மையினர் நல அமைச்சகத்தால் அறிவிக்கை செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களில் பயில்பவர்களுக்கு மட்டும் முழுமையாக கல்வி

கட்டணம் மீள வழங்கப்படுகிறது. மேலும், பராமரிப்புக் கட்டணமாக ஆண்டொன்றுக்கு விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு ரூ.5,000 மற்றும் விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு ரூ.10,000 வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2018–2019 ஆம் ஆண்டில் 4,338 மாணவ/மாணவியருக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.1,139.94 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**22.3 சிறுபான்மையினர் விடுதிகள்**

சிறுபான்மையினர் வகுப்பைச் சேர்ந்த ஏழை மாணவ / மாணவியர் தங்களது கல்வியினை தொடரும் வகையில் எவ்வித கட்டணமும் இன்றி உணவு மற்றும் உறைவிட வசதிகளுடன் சென்னை, வேலூர், கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், மதுரை, தேனி, திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 16 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

விடுதி மாணவ/மாணவியரின் பொது அறிவினை மேம்படுத்தும் வகையில் தினந்தோறும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் மற்றும் ஒரு ஆங்கில நாளிதழ்

வழங்கப்படுகின்றன. விடுதிகளில் நூலக வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்காக சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கப்படுகின்றன. 4 இணை சீருடைகள், ஜமக்காளங்கள் மற்றும் போர்வைகள் வழங்கப்படுகின்றன. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி விடுதி மாணவர்களுக்கு வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சிகள் மூலம் பல்வேறு வேலைவாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. விடுதி மாணவ / மாணவியர்களுக்கு ஆண்டுதோறும் மூன்று மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன. குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள், சூரிய ஒளி மூலம் நீரை சூடாக்கும் கருவிகள், மின் தடையற்ற இன்வெட்டர்கள், வண்ண தொலைக்காட்சிப்பெட்டி போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேற்கண்ட விடுதிகளின் உணவு கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற பணிகளுக்காக 2018–2019 ஆம் ஆண்டில் ரூ.362.65 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இச்செலவினங்களுக்காக 2019–2020 ஆம் ஆண்டிற்கு ரூ.396.23 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 22. 4 முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்

இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள ஆதரவற்ற, கணவரால் கைவிடப்பட்ட மற்றும் வயதான பெண்களுக்கு உதவிடும் வகையில் அனைத்து மாவட்ட தலைநகரங்களில், மாவட்ட ஆட்சித் தலைவரை பதவி வழி தலைவராக கொண்டு மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்கள், சங்கங்களின் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் நன்கொடை மூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப இணை மானியமாக ஒவ்வொரு சங்கத்திற்கும் 1:2 என்ற விகிதாச்சாரத்தில் ஒரு வருடத்திற்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகின்றது.

இச்சங்கங்களின் நிதி ஆதாரங்களின் மூலம் ஆதரவற்ற, வயதான முஸ்லிம் விதவைகள் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லிம் மகளிர் ஆகியோர்களுக்கு உதவிடும் வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தவிர தையல், பூ–வேலைபாடுகள், காலணிகள், கைவினை பொருட்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும்

தேவைக்கேற்ப இதர பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகின்றன. இச்சங்கங்களுக்கு **2018–2019** ஆம் ஆண்டில் அரசின் இணை மானியமாக ரூ. **126.78** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**2019–2020** ஆம் ஆண்டிற்கு ரூ.**100** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முஸ்லிம் மகளிர் சங்கங்களால் திரட்டப்படும் நன்கொடைகளுக்கு ஏற்ப இணைமானியத்தினை இருமடங்காக வழங்குவதற்கான அரசின் ஒதுக்கீடு அதிகரிக்கப்படும்.

## 22. 5 கிறித்துவ மகளிர் உதவும் சங்கம்

தமிழ்நாட்டிலுள்ள கிறித்துவ மதத்தைச் சார்ந்த ஏழ்மை நிலையில் உள்ள ஆதரவற்ற, கணவரால் கைவிடப்பட்ட கிறித்துவ மகளிர் நலனுக்காக மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும் **2018–2019** ஆம் ஆண்டில் மாவட்ட கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்களுக்கு விதை தொகையாக ஒவ்வொரு சங்கத்திற்கும் தலா ரூ.**1** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**22.6 பாரதப்பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம்**

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ் நிர்ணயிக்கும் இலக்கில் உரிய பங்கு சிறுபான்மையின மக்கட்தொகைக்கேற்ப, சிறுபான்மையின மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்திடும் வகையில் பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறுபான்மையின மக்களுக்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட சேவைகளின் பயன், வேலைவாய்ப்புகள், கல்வி உதவித்தொகை வழங்குதல், சுய வேலை வாய்ப்புத் திட்டம், தொழில் நுட்பப் பயிற்சிகள் மூலம் திறனை மேம்படுத்துதல், மாநில மற்றும் மைய அரசின் கீழ் வேலைவாய்ப்பு, சிறுபான்மையினர் வசிக்கும் குடிசைப் பகுதிகளின் நிலையை மேம்படச் செய்தல், இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு உதவி வழங்குதல், இனக்கலவரங்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் சீரிய நோக்கங்கள் ஆகும்.

இத்திட்டம் முறையாக செயலாக்கப்படுவதைக் கண்காணிக்க, மாநில அளவில் தலைமைச் செயலர் அவர்கள்

தலைமையில் ஓர் உயர்நிலைக் குழுவும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் ஒரு குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**22 .7 மறுவாழ்வு நிதி உதவி வழங்குதல்**

இனக்கலவரங்களால் பொருளாதார மற்றும் உடல் ரீதியாக பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் சிறு குற்றங்களுக்காக சிறைதண்டனை பெற்றவர்கள், சமுதாயத்தில் கண்ணியமான வாழ்க்கை நடத்திட உதவும் வகையில் சிறுவணிகம் தொடங்குவதற்கு நபர் ஒருவருக்கு ரூ.10 ஆயிரம் வரை நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

**22.8 ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியுதவி**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்துவ பிரிவினரும் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனித பயணம் செல்வதற்கு நிதியுதவி வழங்கும் திட்டம் **2011–2012** ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு பயனாளிக்கு ரூ.**20,000** வீதம் **500** பயனாளிகளுக்கு நிதி உதவி வழங்க ஆண்டுதோறும் ரூ.**1** கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. **2018–2019** ஆம்

ஆண்டு முதல் புனிதப்பயணம் மேற்கொள்ளும் பயனாளிகள் எண்ணிக்கையினை **500**–லிருந்து **600**–ஆக உயர்த்தியும், இவற்றில் **50** இடங்கள் கன்னியாஸ்திரிகள் / அருட்சகோதரிகளுக்கு ஒதுக்கீடு செய்தும் ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் ரூ.**660** இலட்சம் நிதி உதவி பெற்று **3,300** கிறித்துவர்கள் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இத்திட்டத்திற்கென **2019–2020** ஆம் ஆண்டில் ரூ.**100** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 22.9 கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம்

தமிழகத்தில் உள்ள கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம் அரசால் **2016–2017** ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கு ரூ.**1** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை **16** கிறித்துவ தேவாலயங்களுக்கு ரூ.**39.62** இலட்சம் மானியமாக ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 22 .10 உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியம்

இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்கள், மதரசாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள்/ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் தர்காக்கள், மதராசாக்கள், ஆஷுர்கானாக்கள், அடக்கத்தலங்கள், தைக்காக்கள், முஸ்லிம் அனாதை இல்லங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களின் பொருளாதாரம் மற்றும் கல்வி நிலைகள் முன்னேற்றம் அடைவதற்காக உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

**இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள் விவரம்**

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | உதவித்தொகை |
|---|---|---|
| I | **விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ்**<br>1. விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை<br>2. விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ.1,00,000<br>ரூ.10,000முதல் ரூ.1,00,000 வரை |
| II | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | ரூ.15,000 |

| | | |
|---|---|---|
| III | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை | ரூ.2,000 |
| IV | **<u>கல்வி உதவித்தொகை</u>**<br>1) 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1,000 |
| | 2) 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,000 |
| | 3) 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1,000 |
| | 4) 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1,500 |
| | 5)12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | ரூ.1,500 |
| | 6) முறையான பட்டப்படிப்பு | ரூ.1,500 |
| | 7) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பு | ரூ.1,750 |
| | 8) முறையான பட்ட மேற்படிப்புக்கு | ரூ.4,000 |
| | 9) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | ரூ.5,000 |
| | 10) தொழிற்கல்வி பட்ட படிப்புக்கு | ரூ.4,000 |
| | 11) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட படிப்பு | ரூ.6,000 |
| | 12) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு | ரூ.6,000 |
| | 13) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு | ரூ.8,000 |

| | | |
|---|---|---|
| | 14) ஐ.டி.ஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு | ரூ.1,000 |
| | 15) மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு | ரூ.1,200 |
| V | திருமண உதவித்தொகை | ரூ.2,000 |
| VI. | மகப்பேறு உதவித்தொகை<br>அ. மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம்<br>(6 மாதங்களுக்கு)<br>ஆ. கருச்சிதைவு/கருக்கலைப்பு | ரூ.6,000<br><br>ரூ.3,000 |
| VII. | கண் கண்ணாடி செலவுத் தொகையை ஈடு செய்தல் | ரூ.500 (அதிகபட்சம்) |
| VIII. | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | ரூ.1,000 (ஒரு மாதத்திற்கு) |

இவ்வாரியத்தின் மூலம் இதுவரை **3,578** பயனாளிகளுக்கு **ரூ.116.82** இலட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

## 22.11 பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம் (பிரதம மந்திரியின் சிறுபான்மையினருக்கான மக்கள் மேம்பாட்டு திட்டம்)

பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம் திட்டம், சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பகுதிகளில் உள்ள சிறுபான்மையினரின் சமூக மற்றும் பொருளாதார நிலையை

உயர்த்துவதையும், அவர்களது வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் வகையில் அடிப்படை வசதிகளை வழங்குவதையும் மற்றும் ஏற்ற தாழ்வினை குறைப்பதையும் நோக்கமாக கொண்டதாகும். இத்திட்டத்தின் கீழ் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும். மத்திய அரசின் சிறுபான்மையின நல அமைச்சகத்தால், 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பகுதிகள் என கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டம் தமிழ்நாட்டில், கூடலூர், மணல்மேல்குடி, திருவாடனை மற்றும் மண்டபம் ஆகிய 4 வட்டாரங்களிலும் (Blocks) மற்றும் வேலூர், பேர்ணாம்பட்டு, மேல்விஷாரம், ஆம்பூர், வாணியம்பாடி, திண்டுக்கல், பள்ளப்பட்டி, நாகப்பட்டினம், கீழக்கரை, தூத்துக்குடி, காயல்பட்டினம், கடையநல்லூர், தென்காசி, திருநெல்வேலி, கொல்லங்கோடு, நாகர்கோவில், குறிச்சி மற்றும் குனியமுத்தூர் ஆகிய 18 நகரங்களிலும் (Towns) செயல்படுத்தப்படும்.

இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகளால் **60**:**40** என்ற நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் மொத்த நிதியில் **80** சதவீதம் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு திட்டங்களுக்கும், அவற்றில் **33–40** சதவீதம் பெண்கள் / பெண் குழந்தைகளுக்காக கட்டமைப்புகள் / வசதிகள் ஏற்படுத்துவதற்காகவும் செலவிடப்படும். இத்திட்டத்தின் கீழ் சமுதாய கூடம் அமைத்தல், உண்டு உறைவிடப்பள்ளி, திறன்மிகு வகுப்பறை (Smart class facility), அரசு தொழிற்பயிற்சி நிலையம் / தொழில்நுட்ப கூடங்களில் கூடுதல் வகுப்பறைகள் அமைத்தல், அரசுப்பள்ளிகளுக்கு கட்டிடங்கள், பலவகை தொழில்நுட்ப கல்லூரிகள் அமைத்தல், வேலைக்கு செல்லும் பெண்களுக்கான விடுதிகள் அமைத்தல், மத்திய மாநில அரசின் பல்கலைகழகங்களில் மாணவர் விடுதிகள் அமைத்தல் மற்றும் சிறப்பு வகுப்புகள் உருவாக்குதல், அரசு அங்கீகரித்துள்ள மதராசா பள்ளிகளுக்கு இணைய வசதியுடன் கூடிய கணினிகள் வழங்குதல் மற்றும் மத்திய அரசின் சிறுபான்மை நல அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை சிறுபான்மையினர் அதிகம் வாழும் இடங்களில் ஏற்படுத்தித் தரப்படும்.

## 23. தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், மதவழி மற்றும் மொழிவழி சிறுபான்மையினர் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு அமைக்கப்பட்ட சட்டபூர்வமான அமைப்பாகும்.

இந்த ஆணையம் சிறுபான்மையினத்தவரை பாதுகாத்திட இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் மாநில அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களின் மூலம் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் செயல்படும் விதத்தை ஆய்வு செய்தல், கண்காணித்தல், சிறுபான்மையினர் தொடர்பாக அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் சட்டம் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து உரிய கருத்துக்களைத் தெரிவித்தல், மாநிலத்தில் மத நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துதல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதலுக்கான வழிவகைகளை அரசுக்கு பரிந்துரைத்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்கிறது.

தற்போதைய ஆணையம் திரு. டி. ஜான் மகேந்திரன் அவர்களை தலைவராகக் கொண்டு **9** உறுப்பினர்களுடன்

8.3.2019 முதல் மூன்றாண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

## 24. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் இந்திய கம்பெனிகள் சட்டம் 1956–இன்படி அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் சிறுபான்மையினர்களான இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தவர்கள், பார்சிகள் மற்றும் ஜெயின் ஆகியோர் நலனுக்காக அவர்கள் சிறு வணிகம் / வியாபாரம் மேற்கொள்ள குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கி வருகிறது. இந்நிறுவனம், தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக்கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. சிறுபான்மையின மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக இந்நிறுவனம் காலக்கடன், சிறுகடன் மற்றும் கல்விக் கடன் ஆகிய கடன் உதவிகளை வழங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.5 கோடியாகும். இதில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.2.05 கோடியாகும். இக்கழகம் வழங்கும் பல்வேறு

கடன் திட்டங்களுக்கான நிதியை, மாநில அரசின் பொறுப்புறுதியின் மீது தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக்கழகத்திடமிருந்து கடனாகப் பெற்று வழங்குகிறது.

## 24.1 தனிநபர் காலக்கடன் திட்டம்

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின மக்கள் சுயமாக தொழில் / வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் பின்வருமாறு தனிநபர் காலக் கடன்களை வழங்குகிறது.

| வ.எண் | கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | ஆண்டு வருமான உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | **கடன் திட்டம் I**<br>ரூ.20,00,000 வரையிலான கடன்களுக்கு | 6% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000/–<br>நகர்ப்புறங்களுக்கு ரூ.1,20,000/- |
| 2 | **கடன் திட்டம் II**<br>ரூ.30,00,000 வரையிலான கடன்களுக்கு | ஆண்களுக்கு 8%<br>பெண்களுக்கு 6% | கடன் திட்டம் I–இன் கீழ் பயன்பெற இயலாத ஆண்டு வருமானம் ரூ.6,00,000 வரை உள்ளவர்கள். |

தனிநபர் காலக் கடன் திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் வாங்குவதற்கும் மற்றும் ஆட்டோக்கள் வாங்குவதற்கும் கடனுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டங்களின் கீழ் **2018–2019** ஆம் ஆண்டில் **2,054** பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.**1,440.91** இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## 24.2 சுய உதவி குழுக்கள் மூலம் சிறுகடன் திட்டம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், சுய உதவி குழு உறுப்பினர்கள் (ஆண் மற்றும் பெண் சுய உதவிக் குழு உறுப்பினர்கள்) பலகாரக்கடை, சிற்றுண்டி, ஜவுளி வியாபாரம் போன்ற சிறு வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தினை உயர்த்திட சுய உதவிக் குழுவில் உள்ள நபர்களுக்கு சிறுகடன் வழங்கும் திட்டம் மூலம் பின்வருமாறு கடன் வழங்கப்படுகிறது.

| வ. எண் | கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | **கடன் திட்டம் I** ரூ.1,00,000 வரை (சுய உதவிக்குழு உறுப்பினர் ஒருவருக்கு) | 7% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000 நகர்ப்புறங்களுக்கு ரூ.1,20,000 |
| 2 | **கடன் திட்டம் II** ரூ.1,50,000 வரை (சுய உதவிக்குழு உறுப்பினர் ஒருவருக்கு) | ஆண்களுக்கு 10% பெண்களுக்கு 8% | கடன் திட்டம் I–இன் கீழ் பயன்பெற இயலாத ஆண்டு வருமானம் ரூ.6,00,000 வரை உள்ளவர்கள். |

இத்திட்டத்தின் கீழ் 2018–2019 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்கள் மூலம் 5,645 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.2,565.91 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## 24.3 கல்விக் கடன்

அரசு /அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் இந்தியாவில் ‘‘தொழிற் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு பட்டப்படிப்புகள்'' பயிலும் சிறுபான்மையின மாணவ / மாணவியருக்கு பின்வருமாறு கல்விக் கடன் வழங்கப்படுகிறது.

| வ. எண் | கல்விக் கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | பெற்றோரது ஆண்டு வருமான உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | **<u>கடன் திட்டம் I</u>**<br>இந்தியாவில் கல்வி பயில கல்விக் கடன் ஆண்டுதோறும் ரூ.4 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. மேலும், வெளிநாடுகளில் கல்வி பயில ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. | 3% | கிராமப்புறங்களுக்கு ரூ98,000<br>நகர்ப்புறங்களுக்கு ரூ.1,20,000 |
| 2 | **<u>கடன் திட்டம் – II</u>**<br>இந்தியாவில் கல்வி பயில ஆண்டுதோறும் ரூ.4 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.<br>மேலும், வெளிநாடுகளில் கல்வி | மாணவர்களுக்கு 8%<br>மாணவியருக்கு 5% | கடன் திட்டம் I–இன் கீழ் பயன்பெற இயலாத ஆண்டு வருமானம் ரூ.6,00,000 வரை உள்ளவர்கள். |

| | | | |
|---|---|---|---|
| | பயில்பவர்களுக்கு ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. | | |

இத்திட்டத்தின் கீழ் 2018–2019 ஆம் ஆண்டில் 9 மாணவிகளுக்கு ரூ.13.15 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## 25. தமிழ்நாடு வக்ஃப் வாரியம்

1995 ஆம் ஆண்டு வக்ஃப் சட்டம் (மைய அரசு சட்டம் 43/1995)–இன் கீழ் வக்ஃப் சொத்துக்களை சரியான முறையில் பராமரிப்பதற்காகவும், வக்ஃப் தொடர்பான அலுவல்களை நிர்வகிப்பதற்காகவும் தமிழ்நாடு வக்ஃப் வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வக்ஃப் வாரியம் முறையாக 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படுகிறது. இவ்வாரியம் 2017 ஆம் ஆண்டில் 11 உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டு திருத்தியமைக்கப்பட்டது.

வக்ஃப்கள் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் தொடர்பாக எழும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஏதுவாக

தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம், வக்ஃப் சட்டம் 1995 பிரிவு 83–ன்படி சென்னையில் அமைக்கப்பட்டு 6.8.2018 முதல் செயல்பட்டு வருகிறது. மேலும், தமிழ் நாட்டில் உள்ள வக்ஃப் சொத்துக்களை முழுமையாக அளவை செய்து கணக்கிடுவதற்கு நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர் தலைமையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 25.1 நிர்வாக மானியம்

வக்ஃப் நிறுவனங்களிலிருந்து பெறப்படும் சகாயத் தொகை வருவாயிலிருந்து தமிழ்நாடு வக்ஃபு வாரிய நிர்வாகச் செலவுகளை எதிர்கொள்ள இயலாமல் இருப்பதால், தமிழக அரசு ஒவ்வோர் ஆண்டும் நிர்வாக மானியம் வழங்கி வருகிறது. தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும் நிர்வாக மானியத்தினை தமிழக அரசு 2017–2018 ஆண்டு முதல் ரூ.1 கோடியிலிருந்து ரூ.2 கோடியாக உயர்த்தி வழங்கியுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு அரசு நிர்வாக மானியமாக ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

## 25.2 உலமா ஓய்வூதிய திட்டம்

உலமா ஓய்வூதியத் திட்டம் 1981 ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ்

தமிழ்நாட்டிலுள்ள வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற வறிய நிலையில் உள்ள பேஷ் இமாம், மோதினார், அரபி ஆசிரியர் மற்றும் முஜாவர் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் உலமா ஓய்வூதியம் பெறுவதற்கு 60 வயது நிரம்பிய மற்றும் 20 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் தகுதியுள்ளவர்களாவர். 2011–2012 ஆம் ஆண்டில் இத்திட்ட பயனாளிகள் எண்ணிக்கை 2,400–லிருந்து 2,600 ஆக உயர்த்தப்பட்டது. 2016–2017 ஆம் ஆண்டு முதல் உலமா ஓய்வூதியம் மாதமொன்றுக்கு ரூ.1,000– லிருந்து ரூ.1,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## 25.3 மணவிலக்குப் பெற்ற முஸ்லிம் பெண்களுக்கான வாழ்க்கைச் செலவு மானியம்

முஸ்லிம் பெண்கள் (மணவிலக்கில் உரிமை பாதுகாப்பு) சட்டம் 1986 பிரிவு 4(2)ன்படி, மணவிலக்கு பெற்ற முஸ்லிம் பெண்களுக்கு நீதிமன்ற தீர்ப்புகளின்படி தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தால் வாழ்க்கைச் செலவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

## 25. 4 பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு மானியம்

பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களை பழுது பார்ப்பதற்காகவும்,

புனரமைப்பதற்காகவும் தமிழ்நாடு அரசு பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு மானியம் வழங்கி வருகிறது. **2018–2019** ஆம் ஆண்டில் ரூ.**60** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு **33** வக்ஃபு நிறுவனங்களில் பழுதுப்பார்ப்பு மற்றும் புனரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. **2019–2020** ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கான மானியமாக ரூ.**60** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**25.5 வக்ஃபு நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்பு பணிகளுக்கான தொகுப்பு நிதி**

பள்ளி வாசல்கள், தர்க்காக்கள் போன்ற வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.**3** கோடியில் ஒரு தொகுப்பு நிதி (Corpus fund ) உருவாக்கப்பட்டுள்ளது.

**25.6 காஜிகளுக்கு மதிப்பூதியம் வழங்குதல்**

தமிழ்நாட்டில் பணியாற்றும் காஜிக்களுக்கு மாதந்தோறும் ரூ.**20,000** மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. **2019–2020** ஆம் ஆண்டில் காஜிகளுக்கு மதிப்பூதியம் வழங்குவதற்காக ரூ.**67.20** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 26. தமிழ் நாடு மாநில ஹஜ் குழு

## 26.1 குழுவின் அமைப்பு

ஹஜ் குழு சட்டம், 2002 (மத்திய சட்டம் 35/2002)—இன்படி, ஹஜ் பயணம் சிறப்புடன் அமைய அதற்குத் தேவையான ஏற்பாடுகளை இந்திய ஹஜ் குழு மற்றும் சிறுபான்மையினர் நல அமைச்சகம், புதுடெல்லி ஆகியவற்றின் வழிகாட்டுதலுடன் செய்வதற்கும் மற்றும் ஹஜ் பயணிகளின் நலன் குறித்த பணிகளை மேற்கொள்வதற்கும் மூன்று ஆண்டு காலத்திற்கு தமிழ்நாடு மாநில ஹஜ் குழு, மாநில அரசால் அமைக்கப்படுகிறது. தமிழ்நாடு மாநில ஹஜ் குழு 12 உறுப்பினர்களைக் கொண்டு தமிழக அரசால் 2017 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் தலைவராக திரு. அ. அப்துல் ஜப்பார் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## 26.2 குழுவின் பணிகள்

இக்குழுவின் முக்கியப் பணிகள் பின்வருமாறு:—

1. தமிழ் நாட்டைச் சேர்ந்த பயணிகளிடமிருந்து ஹஜ் பயணத்திற்கான விண்ணப்பங்களைப் பெறுதல், ஹஜ்

பயணத்திற்கான நபர்களை கணினி மென்பொருளைப் பயன்படுத்தி குலுக்கல் முறையில் தேர்வு செய்தல்.

2. இந்திய ஹஜ் குழு, மும்பைக்கு செலுத்தவேண்டிய ஹஜ் முன்பணக் கட்டணம், மீதமுள்ள ஹஜ் தொகை, விமானக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் குறித்த அறிவுரைகளை அவ்வப்போது பயணிகளுக்கு அளித்தல்.

3. ஜித்தாவிலுள்ள இந்திய உதவித் தூதரகத்தின் ஒருங்கிணைப்போடு மக்கா மற்றும் மதீனாவில் தகுந்த தங்குமிடங்களை தெரிவு செய்வதற்காக அலுவலர் ஒருவரை கட்டடத் தேர்வுக் குழுவில் சவூதி அரேபியாவிற்கு அனுப்புதல்.

4. தமிழ் நாட்டைச் சேர்ந்த ஹாஜிகள் சவூதி அரேபியாவில் தங்கியிருக்கும் காலத்தில், ஹஜ் பயணிகளின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு ஹஜ் தொண்டர்களை அனுப்புதல்.

5. ஹஜ் பயணிகளுக்கு கடவுச் சீட்டுகளைப் பெறுவதற்காக மண்டல கடவுச் சீட்டு அலுவலகங்களுடன் ஒன்றிணைந்து பணிபுரிதல்.

6. ஒவ்வொரு வருடமும் “ஹஜ்ஜுும் உம்ராவும்” என்ற கையேட்டை தமிழில் அச்சிட்டு ஹஜ் பயணிகளுக்கு விலையேதுமின்றி வழங்குதல்.

7. சென்னை–ஜித்தா/மதீனா–சென்னைக்கு ஹஜ் விமானங்கள் இயக்கத்தின்போது வெளிமாவட்டப் பயணிகளுக்கு தற்காலிகத் தங்கும் வசதி ஏற்படுத்துதல் மற்றும் தங்குமிடத்திலிருந்து விமான நிலையம் மற்றும் திரும்பி வருவதற்கு போக்குவரத்து வசதி அளித்தல்.

8. ஹஜ் பயணத்தின்போது பின்பற்ற வேண்டிய பயண நடைமுறை மற்றும் செயல்முறைகள் குறித்து தேர்ந்தெடுக்கப்பட்ட பயணிகளுக்கு பயிற்றுவிக்க பல்வேறு மாவட்ட/தாலுக்கா தலைமையகங்களில் புத்தறிவுப் பயிற்சி முகாம்களை நடத்துதல்.

9. மூளைக்காய்ச்சல் தடுப்பூசி மற்றும் போலியோ சொட்டு மருந்தை ஹஜ் பயணிகளுக்கு அளிப்பதற்காக ஹஜ் பயணிகளின் எண்ணிக்கைக்கேற்ப பல்வேறு மாவட்டங்களில் முகாம்கள் நடத்துதல்.

10. மக்கா மற்றும் மதீனா நகரங்களில் ஹஜ் பயணிகளுக்கு தங்குமிட வசதிகளை ஏற்படுத்துதல்.

11. ஹஜ் விமானங்கள் இயக்கம் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் அமைய மத்திய அரசு, மாநில அரசு, இந்திய ஹஜ் குழு, மும்பை முதலான பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களான ஏர் இந்தியா, சவூதி அரேபிய விமான நிறுவனம், இந்திய விமானங்களின் ஆணைக்குழு, சுங்கம், குடியேற்றம், விமான போக்குவரத்து பாதுகாப்பு நிறுவனம் ஆகியவற்றுடனும் மற்றும் இதர தொண்டு நிறுவனங்களின் சேவைகளை ஒருங்கிணைத்தல்.

12. ஹஜ் பயணம் தொடர்பான இதர இடைநிகழ்வு பணிகள்.

## 26.3 நிர்வாக மானியம்

ஒவ்வொராண்டும் மாநில ஹஜ் குழுவிற்கு ஆண்டு நிர்வாக மானியத்தை தமிழக அரசு வழங்கி வருகிறது. நிர்வாக செலவினங்களை தமிழக அரசால் அளிக்கப்படும் மானியத்திலிருந்து தமிழ் நாடு மாநில ஹஜ் குழு மேற்கொள்கிறது. 2018–2019 ஆம் ஆண்டு முதல், தமிழக அரசு இம்மானியத்தை ரூ.30 இலட்சத்திலிருந்து, ரூ.50 இலட்சமாக உயர்த்தி வழங்கியுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கு நிர்வாக மானியமாக ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 26.4 ஹஜ் புனித பயணிகளுக்கு நிதி உதவி

தமிழ்நாடு அரசு ஹஜ் பயணிகளுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தினை **2018–2019** ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஹஜ் பயணிகளுக்கு நிதி உதவி வழங்குவதற்காக தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.**6** கோடி மானியமாக வழங்கப்படுகிறது.

**2018–2019** ஆம் ஆண்டில் **3,769** ஹஜ் பயணிகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது.

**2019–2020** ஆம் ஆண்டிற்கு ரூ.**6** கோடி இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 26.5 ஹஜ் தொண்டர்கள் மற்றும் கட்டடத் தேர்வு குழுவில் உறுப்பினரை அனுப்புவதற்கு மானியத்தை ஒப்பளிப்பு செய்தல்

ஹஜ் பயணிகளுக்கு சேவையாற்ற ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும், கட்டடங்களைத் தெரிவு செய்ய கட்டடத்தேர்வுக் குழுவில் பிரதிநிதியை அனுப்புவதற்குண்டான செலவினத்தை மேற்கொள்ளவும், தமிழ்நாடு அரசு, மாநில ஹஜ் குழுவிற்கு மானியங்களை அளிக்கிறது. **2018–2019** ஆம் ஆண்டில் ஹஜ்

பயணிகளுக்கு சேவை புரிவதற்காக 19 ஹஜ் தொண்டர்கள் சவூதி அரேபியாவிற்கு அனுப்பப்பட்டனர். இத்திட்டத்திற்காக 2019–2020 ஆம் ஆண்டிற்கு ரூ.10.29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முடிவுரை**

தமிழக அரசு நலிவுற்ற நிலையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கு மிக முக்கியத்துவம் அளிப்பதுடன் அவர்களின் கல்வி, சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்த மேற்குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு சீரிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**சீ. வளர்மதி**
**பிற்படுத்தப்பட்டோர் மற்றும்**
**சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்**

## இணைப்பு

## 2019–2020 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| துறை | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தலைமைச் செயலகம் | 598.82 | --- | 0.01 | 598.83 |
| வக்ஃபு மற்றும் ஹஜ் குழு | 1304.29 | --- | --- | 1304.29 |
| பிற்படுத்தப்பட்டோர் நலன் | 41530.26 | 185.92 | --- | 41716.18 |
| மிகப்பிற்படுத்தப்–பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 45642.96 | 223.31 | --- | 45866.27 |
| தமிழ்நாடு பிற்படுத்தப் பட்டோர் ஆணையம் | 99.62 | --- | --- | 99.62 |
| மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 63.66 | --- | --- | 63.66 |
| சிறுபான்மையினர் நலன் | 1197.19 | 300.99 | --- | 1498.18 |
| **மொத்தம்** | **90436.80** | **710.22** | **0.01** | **91147.03** |




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **13.06.2019** அன்று புதிதாகக் கட்டப்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி விடுதிக் கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23.08.2018 அன்று மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள்.




மாநில அளவில் சிறந்து விளங்கும் காப்பாளர்/காப்பாளினிகளுக்கு மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்களால் **26.06.2019** அன்று விருதுகள் வழங்கப்பட்டன.

# இட ஒதுக்கீடு விவரம்



# மாவட்ட வாரியான விடுதிகள் விவரம் (1348)

